EGD. No. M. 6311

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 231

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்.. அண்ணாதுரை

சந்தா விபரம்

உள்நாடு (இலங்கை உட்பட)	
ஆண்டு	ரு. 24—0—0
6 மாதம்	ரு. 12—0—0
3 மாதம்	ரு. 6—0—0
வெளிநாடு:	
ஆண்டு	ரு. 30—0—0
6 மாதம்	ரு. 15—0—0
3 மாதம்	ரு. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY THE OFFICIAL ORGAN OF THE D.P.F

சென்னை: மாசி 28உ வியாழன் (11—3—54) ★ ★ ★ வெளியூர்: மாசி 29உ வெள்ளி (12—3—54)

'வல்லூறை விரட்ட ஆதரவு உண்டு'

—(:)—

'ஆச்சாரியார் கரத்தை மட்டுமல்ல—அவர் கருத்தையும் நாங்கள் வலுப்படுத்த தயார்'

—(:)—

'நில தானத்தால் உழவும் உருப்படாது; நெசவும் வளராது'

'நெசவாளரை மாற்றுத் தொழில் கற்கச் சொல்வது இயலாமையின் அறிகுறியே!'

கைத்தறி வார விழாவில் பொதுச்செயலாளர் அண்ணா

சென்னை, மார்ச் 11—

"ஆடை நெய்வதற்கு நீள வாட்டத்திலும், குறுக்கு வாட்டத்திலும் நூல்கள் தேவைப்படுகின்றன. இருமருங்கிலிருந்தும் வரும் நூல்கள் ஒன்று சேர்ந்துதான் ஆடை நெய்யப்படுகிறது. இந்த இரண்டு பக்கத்து நூல்களுக்கும் கொஞ்சம் சமத்துவம் இருக்க வேண்டும்; அப்போதுதான் ஆடை அழகாக நெய்யப்பட முடியும். ஒரு நூல் இன்னொரு பக்கத்து நூலை தாழ்வாக எண்ணக்கூடாது; அல்லது, தேவை இல்லை என்றும் எண்ணக் கூடாது. அதைப்போலத்தான் நானும், நண்பர் செங்கல்வராயனும் ஒன்றாகச் சேர்ந்து அரசியல் ஆடைகள் நெய்ய முடிகிறதென்றால், அதற்குக் காரணம், ஒருவரை ஒருவர் தாழ்வாக எண்ணிக் கொள்ளாமலிருப்பதே! பொதுப் பிரச்னைகளில பலரும் சேர்ந்து பரிகாரம் காண வேண்டுமென்ற அவரது பெரும் உள்ளத்தை நான் வரவேற்கிறேன்."

—இவ்வாறு, தோழர் அண்ணாதுரை அவர்கள், சென்னையில் நடைபெறும் அகில—இந்திய கைத்தறி வார 4-ம் நாள் வைபவத்தில் பேசும்பொழுது குறிப்பிட்டார். தொடர்ந்து அவர் பேசியதாவது:—

"'நெசவாளர் துயரப்படுகிறார்கள் — எனவே, கைத்தறி ஆடையே அணிய வேண்டும்,' என்னும் தர்ம சிந்தனையும், அக்கரையும் நெசவாளர் துயர் ஓரளவு நீங்கியதும், குறையக் கூடியது தானே! தர்ம சிந்தனையாலேயே ஒரு பெரும் தொழிலை எத்தனை நாட்களுக்குக் காப்பாற்ற முடியும்? ஆகவேதான், நான் சொல்கிறேன்—முதலில் எல்லாக் கட்சியினரும், இந்தக் கைத்தறித் தொழில் வாழ வேண்டுமோ, கூடாதா என்பதில் தங்கள் கருத்தை வெட்ட வெளிச்சமாக்கிவிட வேண்டும் விஞ்ஞானம் வளர்ந்தோங்கி யிருக்கும் காலத்தில், கையாலேயே நெய்யுந் தொழில் தேவைதானா?—என்று கேட்கலாம். விஞ்ஞானம் வளர்ந்திருக்கிறது—பல நிற ஒளி தரும் விளக்குகளை நம் கண்முன் காண்கிறோம்; இதோ ஒலிபெருக்கி—பலருக்கும் பயன்படுகிறது; இன்னும் எத்தனையோ அற்புதங்கள் விஞ்ஞான வளர்ச்சியின் விளைவுகள்; ஆடை நெய்வதிலும் இயந்திரங்கள் கைத்தறியுடன் போட்டியிடுகின்றன. கைத்தறித் தொழில் ஆலைத் துணி உற்பத்தியுடன் போட்டியிட முடியவில்லை—ஆலையை எதிர்த்து நின்று வளரமுடிய வில்லை."

"புராண காலத்திலே வேண்டுமானால், ஒரு கரையிலே நீர் அருந்தும் ஆட்டுக்குட்டியின்மீது இன்னொரு கரையிலிருக்கும் புலி பாய்ந்தால், ஸ்ரீமந் நாராயணமூர்த்தியின் கையிலிருக்கும் சங்கு சக்ரம் ஓடோடி வந்து புலியின் கழுத்தை அறுத்து ஆட்டுக்குட்டியை காப்பாற்றலாம்; ஆனால், இந்தக் காலத்தில் நண்பர் செங்கல்வராயன் சார்ந்திருக்கும் கட்சியினரின் ஆட்சிக் கொடியிலுள்ள அசோகச் சக்கரத்தால், கைத்தறித் தொழிலை, மில் தொழில் போட்டியினின்றும் காப்பாற்ற இயலவில்லையே! அல்லது, இந்த இரண்டும் மோதிக்கொள்ளாதிருக்க வேறு ஒரு மத்திமமான தொழிலையும்கூட அவர்களால் உண்டுபண்ண இயலவில்லையே! எனவேதான் சொன்னேன்—எல்லாக் கட்சியினரும், கைத்தறித் தொழில் வாழ வேண்டுமோ கூடாதா என்பதை முதலில் திட்டவட்டமாகக் குறிப்பிட்டு விட வேண்டுமென்று! அப்போதுதான், வாழ வேண்டுமென்றால், அது எப்படி வாழ்வது? அந்தத் தொழில் வாழாமல் தடுப்பவற்றை எப்படி நீக்குவது?—என்பதுபற்றி முடிவு காண முடியும். அதை விட்டு, நெசவாளருக்கு இதம் தரும் முறையில் அவர்கள் கஷ்டப்படும்போது ஏதாவது செய்வதால் மட்டும் பிரச்னை தீர்க்கப்பட முடியாது."

"எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையேயும் நெசவுத் தொழில் வாழ்கிறதென்றால், அது அரசாங்கத்தினால் அல்ல; கட்சிகளினால் அல்ல;— தாய்மார்களால்தான் அது வாழ்கிறது; தாய்மார்கள்தான் தங்கட்குத் தேவையான சேலைகளை எல்லாம் கைத்தறியாகவே உடுத்தி வந்தனர்; ஆனாலும், கடந்த பத்து ஆண்டுகளிலே அதுவும் மாறலாயிற்று. ஆலைத் துணிகள் அழகழகான 'மார்டூ'டன் வர ஆரம்பித்தன."

"மதுக்கடையை திறந்து வைத்துக்கொண்டு மதுவிலக்குப் பிரச்சாரம் எப்படிப் பயன் தராதென்று நாம் உணர்ந்தோமோ, அது போன்று, ஆலைத் துணிகளை அணி அணியாகக் குவித்து வைத்துக் கொண்டு, அந்த 'வண்ணப் பூப் போட்டதைப் பாராதே! இந்த வறியவன் நெய்ததைப் பார்' என்றால் எப்படி முடியும்?"

"சென்னையைப் பொறுத்தவரையில் அன்பர் ஆச்சாரியார் சட்டசபையிலேயே தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்—வேட்டி, புடவைகளின் உற்பத்தியை கைத்தறிகளுக்கே ஒதுக்க வேண்டுமென்று! அந்தத் தீர்மானத்தை இன்னும் மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. 'ஏற்றுக் கொள்ளுமாறு செய்ய நீங்கள் எல்லாம் என் கரத்தை வலுப்படுத்த வேண்டும்' என்று சொல்லியுள்ளார்.

"ஒரு சோலையிலே மயிலும், குயிலும், கிளியும், மைனாவும், வானம்பாடியும் ஆடிப்பாடி பறந்து திரியும்போது வல்லூறு அச்சோலையை வட்டமிட்டால், அந்த வல்லூறை விரட்டி, பறவைகளுக்குப் பாதுகாப்புத் தருவதுதானே நியாயம்? அதற்கு அன்பர் ஆச்சாரியாரின் கரத்தை மட்டுமின்றி கருத்தையும் நாங்கள் வலுப்படுத்த எப்போதும் தயார். இந்தக் கைத்தறி நெசவாளர் பிரச்சினையிலே அமுங்கிக் கிடக்கும் அரசியல் அடிப்படையை எல்லோரும் எண்ணிப் பார்க்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"மில் துணியிலே கிடைக்கும் உபரி வரியை வைத்து கைத்தறித் தொழிலை வளர்க்க எண்ணுவது—ஒரு கனவானின் மோட்டார் டிரைவர், தன் மகன் கலியாணத்திற்

(4-ம் பக்கம் பார்க்க)

ஐவர் வழக்கு

சென்னை, மார்ச் 11—

ஐவர் வழக்கை விசாரிக்க இருந்த நீதிபதிகளில் ஒருவர் இன்றும் உயர் நீதிமன்றத்திற்கு வராத காரணத்தால், வழக்கு நாளைக்குத் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. விபரம் பின்னர்.

"நெசவாளருக்கு 5 ஏக்கர் நிலம் தர வேண்டும்"

—(:)—

'மற்றதொழிலும் கற்றுத்தர வேண்டும்'

கைத்தறி வாரக் கூட்டத்தில் முன்னாள் மேயர் டி. செங்கல்வராயன் பேச்சு

சென்னை, மார்ச் 11—

"இந்த விழாவில் இத்தனை நாளும் இல்லாத ஒரு விசேடம் இருக்கிறது. இரண்டு கட்சிகளைச் சார்ந்த நானும், தோழர் அண்ணாதுரை அவர்களும் ஒரே மேடையில் ஒன்று சேர்ந்திருக்கிறோம்—கைத்தறி நெசவாளர் பிரச்னை பற்றி பேசுவதற்காக! இம்மாதிரியான சமூகப் பிரச்னைகளில், பொதுப் பிரச்னைகளில், வேறு வேறு கட்சியைச் சார்ந்தவர்களாக நாங்கள் இருந்தபோதிலும், எங்களைப் பொறுத்தவரையில், கட்சிகளை மறந்து ஒன்றாக வேலை செய்திருக்கிறோம்; எங்கள் இருவரால் மட்டும்தான் இம்மாதிரி ஒன்றாக வேலை செய்ய முடியும். நானும், நண்பர் அண்ணாதுரையும் பெத்துநாயக்கன்பேட்டையில் ஒன்றாக வாழ்ந்தவர்கள். அப்போதும் நாங்கள், குடியிருப்போர் பிரச்னைக்கு ஒன்று சேர்ந்து பரிகாரம் காண முற்பட்டோம்; இப்போது கைத்தறி நெசவாளர் பிரச்னையில் ஒன்று சேர்ந்திருக்கிறோம்,"

—இவ்வாறு, சென்னையில் நடைபெறும் அகில-இந்திய கைத்தறி வார 4-ம் நாள் வைபவத்தில், தலைமை தாங்கிப் பேசுகையில் தோழர் டி. செங்கல்வராயன் குறிப்பிட்டார். தொடர்ந்து அவர் பேசியதாவது:—

"கைத்தறித் தொழில் 28 லட்சம் தறிகளை உடையது. ஒவ்வொரு தறியையும் நம்பி 7 அல்லது 8 பேர் வேலை செய்யமட்டுமின்றி, அந்த ஒரு தறியினால் கிடைக்கும் பலனை அனுபவிக்கவும் வேண்டியுளது. 28 லட்சம் தறிகளும், 2,000 கோடி கெஜம் துணிகளை நம் மக்களுக்கு ஆண்டு தோறும் தருகின்றன. இம்மாதிரியான பெரியதொரு கைத்தொழிலுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளதென்றால், இந்தப் பிரச்னை சாமானியமானதல்ல. இதுவரை எத்தனையோ கட்சிகள் என்ன என்ன நடவடிக்கைகளை எல்லாம் எடுத்துப் பார்த்துவிட்டன. சிலர் இந்தத் தொழிலை எல்லாம் ஒழித்து விட்டு, எல்லாவற்றையும் இயந்திர மயமாக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். இதனாலேயே இந்தப் பிரச்னை தீர்ந்துவிடுமா என்றால், இல்லையென்று சொல்ல வேண்டும்."

"ஆட்சியாளர்கள் இன்னும் நெசவாளருக்குச் செய்ய வேண்டியுளவற்றில் (1) நெசவாளர்க்கு 5 ஏக்கர் நிலம் தர வேண்டும்; (2) கைத்தறி நெசவாளர் குழந்தைகளுக்குவேறு கல்வி தர வேண்டும்; (3) இப்போதுள்ள நெசவாளர்க்கு வேறு ஒரு 'மாற்றுத் தொழிலும்' கற்றுத்தர வேண்டும்."

அகில — இந்திய 'கைத்தறி வார' விழாவின் நான்காம் நாள் வைபவம் நேற்று மாலை எழும்பூரில், சென்னை மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் சார்பில் நடைபெற்றது. சங்கத் தலைவர் திரு எம். பி. நாச்சிமுத்து, எல்லோரையும் வரவேற்றுப் பேசிவிட்டு, அன்றைய கூட்டத்திற்கு திரு. டி. செங்கல்வராயன் அவர்களைத் தலைமை தாங்குமாறு வேண்டினார். தோழர் செங்கல்வராயனின் தலைமையுரைக்குப் பின், தி. மு. கழகப் பொதுச்செயலாளர் கைத்தறி நெசவாளர் நிலை குறித்தும், கைத்தறித் தொழில் நிலைத்து நிற்க வேண்டுவதற்கு என்ன செய்ய வேண்டுமென்பது குறித்தும் சொற்பொழிவாற்றினார்.

கூட்டத் துவக்கத்திற்கு முன், தி. மு. கழகப் பொதுச் செயலாளர் தோழர் அண்ணாதுரையையும், தோழர் செங்கல்வராயனையும் சங்கத் தலைவர், அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கைத்தறித் துணிக் கண்காட்சி சாலைக்கு அழைத்துச் சென்றார். கூட்டத்திற்கு ஏராளமான தாய்மார்கள் வந்திருந்தது குறிப்பிடத் தக்கது.

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 11—3—54 வியாழன்

இதயக் குமுறல்!

"பழைய கல்வி ஏற்பாட்டிலும் கூட, மாணவர்களின் எண்ணிக்கையைக் கூட்டிச்சொல்வது பள்ளிகளில் பொது வழக்காக இருந்தது. பள்ளி மாணவர்களின் தொகை இரட்டிப்பாகும் என்று எதிர்பார்த்து சர்க்கார் புதிய திட்டத்தைப் புகுத்திய போது, இந்தக் கேடான பழக்கம்—சிறுவர்கள் எண்ணிக்கையைப் பொய்யாகக் கூட்டிக் குறிப்பு எழுதும் பழக்கம்—எந்த அளவு கூடுதலாகும் என்பதை ஒருவாறு கற்பனை செய்து கொள்ளலாம்; பல பெற்றோர்கள், தங்கள் சிறுவர்களைப் பள்ளிக்கு அனுப்ப வெளிப்படையாக மறுத்துவிட்டனர்; புதிய திட்டம் புகுத்தப்பட்டதிலிருந்து பள்ளிகளில் மாணவர் தொகை குறைந்துபோய் இருப்பதை என் கண்ணாரக் கண்டதோடு மட்டுமல்லாமல், போதிக்கப்படும் கல்வியின் தரங்கூட குறைந்து போயிருப்பதையும் கண்டேன்."

"இத்தகு சூழ்நிலையில், வெறும் மதிப்பைப் பற்றிக் கொண்டு, இந்தத் திட்டத்தை தொடர்ந்து செயலாற்ற வேண்டும்! ஏதோ உள்ளெண்ணத்தைக் கொண்டுதான், நான் இக்கருத்துக்களைக் கூறினேன் என்று ஒருவரும் கற்பனை செய்து கொள்ளவேண்டாம்."

"நான் யாருக்கும் எதிராக இல்லை. நான் எதை கிராமங்களில் என் கண்கூடாகக் கண்டேனோ, எதை அடுத்து அடுத்து கிராம மக்கள் என்னிடம் கூறினார்களோ, அதையே நான் ஒளிவு மறைவு இல்லாமல் வெளியிட்டேன். இத்துறையில், ராஜாஜி தனது பிடிவாதத்தை விட்டுக்கொடுக்க வேண்டும். இத்தொடர்பில், அவருக்கு என்னுடைய வேண்டுதல், இது ஒன்றே ஒன்றுதான்."

"இத்திட்டத்தை குரங்குப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருந்தால், அது, நமது கட்சியின் எதிர்காலத்திற்குச் சாவுமணி அடிப்பதாகும்."

"முதல் முதலாக நான் ஒரு காங்கிரஸ் கட்சிக்காரன் என்ற முறையிலும், இரண்டாவதாக தேசத்தின் ஒரு குடி என்ற முறையிலும், இப்படிக் கூற எனக்கு உரிமை உண்டு என்ற முறையிலும், இந்த எச்சரிக்கையை விட, நான் கடமைப்பட்டிருக்கிறேன்."

மேலே எடுத்துக்காட்டியுள்ள, கருத்துரைகள், நமது கழகப் பொதுச்செயலாளரோ அல்லது மற்றுமுள்ள கழக முன்னணி வீரர்களோ கூறினதல்ல. கனம் ஆச்சாரியாரின் புதிய கல்வித் திட்டத்தை ஏட்டளவிலேயே கண்டுவிட்டு, திட்டத்தில் அது சொத்தை இது சொள்ளை என்று குறை கூறும் வெறும் வாயளப்பும் அல்ல. ஆட்சிப் பொறுப்பில் இருந்து, அனுபவம் பெறாது கட்டின வீட்டிற்குக் குறை பல கூறும் பொறுப்பற்றவர் கூற்றுமல்ல இது. ஆட்சியாளர்கள் வழுக்கி விழும் சந்தர்ப்பங்களைக் கூர்ந்து கவனித்திருந்து, வாய்ப்பு நேருங்கால், அவைகளை தங்கள் கட்சிக்கு ஆக்கந்தரும் வகையில் மாற்றி அமைத்துக்கொள்ள முயலும் 'அரசியல் சூதாடி'களின் சாகசப் பிதற்றலும் அல்ல அது!

அகத் தூய்மையும், புறத் தூய்மையும் ஒருங்கே பெற்ற உத்தமர், 'பேசா நாளெல்லாம் பிறவா நாளே' எனக் கொண்டு பிறை சூடியை அனவரதமும் துதித்து வாழும் திருநீற்றுத் திருக்கோலத்தவர், காந்திய வழி நின்று 'என் கடன் பணி செய்து கிடப்பதே' எனப் பொது வாழ்வில் ஈடுபட்டுள்ள காங்கிரஸ் புனிதர், பழியஞ்சா நகர வாழ்வை வெறுத்து, சிற்றூர் வாழ்வே சிறந்ததெனக் கண்டு, சிற்றூர் சிறு குடிசையில் தங்கி, 'தொண்டருக்குத் தொண்டராய்' சேவை புரிந்துவரும் சீரியர், தும்பை மலர் போன்ற தூய வெள்ளைக் கதருடுத்திக் காட்சி தரும் கண்ணியர், காந்தி இராமசாமி எனக் காங்கிரஸ் கட்சியினரிடம் சிறப்புப் பெயர் பெற்று முன்னாள் முதலமைச்சராக இருந்து பணியாற்றிய பெருந்தகையர்—ஓமந்தூர் இராமசாமி அவர்கள் ஆவர். அவர் மேல் சபையில் கனம் ஆச்சாரியார் அவர்களை நேர் நிறுத்தி வைத்து, தம் இருதயத்தைத் திறந்து, குமுறலைக் கொட்டி இருக்கிறார்.

புதிய தொடக்கக் கல்வித் திட்டத்தில், நாமும், நல்லோர் பலரும் கண்டு கூறிய குறைகள் அனைத்தும் இருப்பதாக ஒப்புக்கொண்டு, தக்க எடுத்துக்காட்டுகளுடன் அவைகளை மெய்ப்பித்துக் காட்டி இருக்கிறார்.

ஆட்சியாளர்களிடம் உள்ள அச்சத்தின் காரணமாக, அந்தக் காலத்திலேயே ஆசிரியர்களிடம் குடியேறிப் போயிருக்கிற பள்ளிக்கு அதிகமாக மாணவர்கள் வருகிறார்கள் எனப் பொய்க் கணக்கு எழுதும் தீய பழக்கம், புதிய திட்டம் புகுத்தப்பட்ட பின்னர், பெரிய அளவிற்குப் பெருகிப் போயிருக்கிறது என்று படம் பிடிக்கப்பட்டிருக்கிறது—நம்மால் அல்ல—ஓமந்தூராரால்! காந்திய இராமசாமியால! கடவுள் வாதுகாப்பாளரால்!

மாணவர்கள் தொகையைப் பொய்யாகக் கூட்டிக் கூறும் பழக்கம், இதுவரை ஆசிரியர்களுக்கு மட்டுமே பிறப்புரிமையாக இருந்தது மாறிப்போய், கனம் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்களின் அமைச்சர் குழுவினர்களுக்கு மட்டுமே உள்ள, தனிப்பெரும் பிறப்புரிமையாகப் போய்விட்டது என்ற மகத்தான உண்மையை, ஓமந்தூரார் அறியார் என்று நம்மால் எப்படிச் சொல்ல முடியும்?

புதிய திட்டத்தால் பள்ளிக்கூடங்களில் மாணவர் தொகை முன்னிலும் குறைந்துபோய் இருக்கிறது; என் கண்ணாரக் கண்டேன்; கிராமப் பெற்றோர்கள் குய்யோ முறையோ எனக் கதறிட என் காதாரக் கேட்டேன்; வேண்டாம் பிடிவாதத்தை விடுவீர்; என்றெல்லாம் முன்னாள் முதல்வர் பன்னிப் பன்னிக் கூறியிருக்கிறார் — கூறியா இருக்கிறார்?—கோபமும் இயலாமையும் கலந்த குரலிலே சொற்களைக் கொட்டி இருக்கிறார்!

தம் ஒரு கண்ணைப் பிடுங்கிவிட்டு, மற்றொரு கண்ணைப் பிடுங்கி எடுக்க முயலுகையில் 'நில்லு கண்ணப்பா! நில்லு கண்ணப்பா!' என்று கருங்கல் வெடித்துத் தடுத்து நிறுத்தினதாக சேக்கிழார் ஒரு சிறு கதை கூறி இருக்கிறார். சேக்கிழார் கண்ட கல்லுக்கிருந்த கருணைகூட, நடமாடும் சிலையாக உள்ள இந்த கனத்துக்குக் கிடையாது என்பதை ஓமந்தூரார் அறியாரா என்ன? நம்மைப் போலவே அவரும் அறிந்தே இருக்கிறார்! இருந்தாலும், சிற்றூர் மக்கள் கல்வி நலத்தில் அவருக்குள்ள பற்றும், அதைக் காட்டிலும் காங்கிரஸ் எதிர்காலத்தில் அவருக்குள்ள பேராசையும், அவரை, கனம் ஆச்சாரியாரின் முகத்திற்கு நேராகக் குமுற வைத்திருக்கிறது!

கல்வித் தரம் கெட்டுவிட்டதே என்று உள்ளக் கொதிப்போடு ஓமந்தூரார் கூடக் கூக்குரலிடுகிறார். 'போலி கவுரவம் பாராதீர்! பிடிவாதம் காட்டாதீர்! திட்டத்தை மேலும் தொடராதீர்! கைவிடுவீர்! கைவிடுவீர்!' என மண்டியிட்டு மன்றத்தில் மன்றாடுகிறார் முன்னாள் முதல் அமைச்சர் அந்தப் பீடத்தில், இந்நாள், முறையில்லா முறையில் பெற்று, கம்பீரமாக வீற்றிருக்கிற கனவான், 'நானும் கிராமத்தவன்தான்' என்று எதிர் வழக்காடக் கிளம்பி, 'இன்று நீர் நகரவாசி' என்று இராமசாமி அவர்கள் கூற, இடத்தில் அமரும் ஆணவப் போக்கில் ஈடுபட்டுள்ளார்!

திட்டத்திற்கு எதிராக எடுத்துக்காட்ட வேண்டிய நியாயங்களை எல்லாம் எடுத்துக் காட்டிவிட்டு, இறுதியாக, திட்டத்தைப் புகலாகக் கொண்டு எதிர்க் கட்சியினர் சிற்றூர்களில் செல்வாக்குப் பெறுகின்றனரே என, ஓமந்தூரார் பழக்க வாசனையால, பதறுகிறார்! 'திட்டத்தால காங்கிரசுக்கு சாவுமணி அடிக்கிறீரே,' என்றும், காங்கிரசை முன் தள்ளியும் முடிவாக வாதிட்டு முடித்துவிட்டார், காந்திய வழி நிற்பவர்!

கனம் ஆச்சாரியாரின் முன்னாள் செயல்—அதாவது, 1942-ல் காங்கிரசிற்கு எதிராக அவர் நடந்து கொண்ட முறையைக் கண்ட பிறகும், ஆச்சாரியார் காங்கிரசுக்குச் சாவுமணி அடிப்பதில் பின்வாங்கிவிடுவார் என்று ஓமந்தூரார், அதைச் சுட்டிக்காட்டி நியாயம் வழங்கக் கேட்டது, காங்கிரசில் அவருக்குள்ள மாறா மனத்தைத்தான் நமக்குக் காட்டுகிறது!

மக்கள் மடிந்தும், குருதியை மண்ணோடு குழைத்தும், திட்டத்தை அறவே கைவிட வேண்டும் என்று எண்ணாத 'இரக்கமென்ற ஒரு பொருளிலா அரக்கர்' வழிவந்த கனம் ஆச்சாரியாரோ, 'தாம் பிடித்த முயலுக்கு மூன்று கால்' என இறுதி வரையில் சாதிக்கத் தவறுவார்?

பதவியை விட்டு, அவர் விரட்டப்பட்டால் அல்லாது, ஓமந்தூரார் போன்ற நானகாம் வருணத்தவர் கூவினாலும் கெஞ்சினாலும், கத்தினாலும் கதறினாலும், மனுக்குலத்தவராகிய கனம் ஆச்சாரியார், அவைகளை ஒரு பொருட்டாக மதிக்கமாட்டார்! முகத்தாலும் மதிக்கமாட்டார்!

கனமாக அவர் உள்ள வரையில், அவருடன் பிறந்த ஆணவம் அவரை விட்டுத் தொலையப்போவதில்லை! எல்லாம் பதவிநாதன் தந்த பாக்கியம்!

தென்னாட்டு கலாசாரத்தை 'வடநாட்டு மலான்கள்' வர்ணிக்கும் விசித்திரம்!

'சச்சா சௌத்ரி' படத்தின் மூலம் வேண்டுமென்றே தமிழரை இழிவுபடுத்தும் தான்தோன்றித்தனம்!

தணிக்கை அதிகாரிகளின் அனுமதி தமிழ் நாட்டுக்கு வடநாட்டினர் சவால் விடுவதாகும்

தமிழனின் இதயம் வெதும்பித் துடிக்கும்—வடநாடு-தென்னாடு 'உறவு' நொறுங்கி விடும்!

தமிழர்களின் மனதைப் புண்படுத்தும் முறையில் தமிழர்களின் கலாச்சாரம்—உணவு—உடை இவைகளைப் பரிகசித்துப் பிடிக்கப்பட்டுள்ள, "சச்சா சௌத்ரி" என்ற இந்திப் படத்தை தணிக்கை அதிகாரிகள் அனுமதித்திருப்பது தமிழர்களுக்கு, வடநாட்டார் 'சவால்' விடுப்பது போல் அமைந்திருக்கிறது.

"தென் ஆப்பிரிக்க மலானின் நிற வெறித்தனம் வடவராகிய எங்களுக்கும் உண்டு" என்று காட்டும் வடநாட்டு உள்ளப் பிரதிபலிப்பை 'சென்சார் போர்டு' மிகத் துணிச்சலுடன் அனுமதித்திருக்கிறது.

உலக நாடுகளும் புகழக்கூடிய தென்னாட்டு கலாசாரத்தைப் பரிகசிக்கும் இப்படத்தைத் தணிக்கை அதிகாரிகள் மீண்டும் தணிக்கை செய்து, தென்னாடு—வடநாடு உறவு பாதிக்கப்படாமலிருக்க ஆவன செய்ய வேண்டும்.

'தமிழ் வளர்த்த மதுரையில், 'கர்தார்' படக் கம்பெனியாரால் தயாரிக்கப்பட்ட "சச்சா சௌத்ரி" என்ற இந்திப் படம் ஒன்று தற்சமயம் திரையிடப்பட்டு வருகிறது.

"ஐயையோ" என்ற வசனத்தைக் கேலியாக அடிக்கடி அப்படத்தில் புகுத்தியிருக்கின்றனர்.

இட்லி சாம்பார் சாப்பிடுவதனாலும், வேட்டி அணிவதாலும் தமிழர்கள் நாகரிகமில்லாதவர்கள் என்றும், தமிழர்கள் இசை பாடுவது குதிரை கனைப்பதற்கு ஒப்பாயிருக்கிறதென்றும், வடநாட்டாரின் சங்கீதம்தான் உயர்ந்தது என்றும் உணர்த்தப்பட்டிருக்கிறது.

இதற்குரிய பாகத்தை ஒப்புக்கொண்டு நடிப்பவர் வடநாட்டாரின் காலில் விழுவது போன்றும் இன்னும் வர்ணிக்க முடியாத அளவுக்கு இழிவு செய்யப்பட்டுள்ள இப்படத்தைப் பார்க்கும் ஒவ்வொரு தமிழனின் இதயமும் வெதும்பித் துடிக்கும்,

இப்படம், வடநாட்டுக்கும்—தென்னாட்டுக்கும் வேண்டிய உறவுக்குப் பங்கம் ஏற்படுத்துமோ என்று ஐயுறத்தக்க வகையில் பிடிக்கப்பட்டுள்ளது.

"இப்படம் தென்னாட்டிற்கு வந்தால் தமிழர்கள் கிளர்ச்சி செய்ய வேண்டும்" என்று வடநாட்டுத் தமிழர் ஒருவர் இங்கு எழுதியுள்ளார்.

இந்தப் படத்தை அனுமதித்த விதத்தைப் பற்றிப் பாராளுமன்றத்தில் கூடக் கேள்வி எழுந்தது. அவ்விதமிருந்தும் அப்படத்திலுள்ள குறையை நிவர்த்திக்காமல் அதனைத் தென்னாட்டுக்கு அனுப்பியவர்களின் துணிச்சலை விபரிக்க முடியாது.

தென்னாட்டில் திரையிடப்படும் படத்தைச் சென்னை அரசாங்கமேனும் பரிசீலித்துத் தடை செய்திருக்கலாம். அது பல இடங்களில் ஓடி மக்கள் கிளர்ச்சி ஏற்பட்ட பின்பு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்வதென்ற மாமூல் வழக்கம் இவ்விஷயத்திலும் கையாளப்பட்டால் அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதற்குள் நம்மைத் தாழ்த்திப் படம் பிடித்தவர்கள் நம்மிடத்திலேயே அதைக் காட்டி வசூலும் செய்து கொண்டு போய்விடுவார்கள்,

['தமிழ் நாடு' இதழில் வெளிவந்துள்ள கடிதம்.]

நியூயார்க், மார்ச். 10—இவ்வாண்டில் 35 கோடி 70 லட்சம் பவுன் மதிப்புக்கு மேற்பட்ட தளவாடங்களை இந்தோ-சீனாவுக்கு அமெரிக்கா விநியோகிக்கும் என்று அறிவிக்கப்படுகிறது.

'பெரிய மனிதர்' மீது 'சின்ன மனிதர்' பாய்ச்சல்

நிபுணர்கள் கருத்து நடைமுறைக்கு ஒத்து வராதாம்!

கவுரவ சம்பளக்காரரின் சலசலப்பு

சென்னை, மார்ச் 9—

கும்பகோணத்தில் இந்திய வர்த்தக மந்திரி, ஆச்சாரியாரின் புதிய கல்வித் திட்டத்தைப் பற்றி கூறியிருப்பதைக் குறித்து சென்னை கல்வி ஆலோசகர் இராமச்சந்திரன் அவர்களின் அபிப்பிராயத்தை பத்திரிகை நிருபர்கள் கேட்டதற்கு அவர் பின்வருமாறு கூறினார்:—

"டி. டி. கிருஷ்ணமாச்சாரியுடன் விவாதம் செய்வதென்றால், நான் மிகவும் சிறிய மனிதன்; அவர் பேசியிருப்பதைப் பத்திரிகையில் நுணுக்கமாக படித்தேன்; அவர் பேசியதாகப் பத்திரிகையில் வெளி வந்திருப்பது உண்மையானால், ஆதாரக் கல்வி முறையையே அவர் விரும்பவில்லை என்ற முடிவிற்குத்தான் நான் வரவேண்டியிருக்கிறது; அப்படியானால், நான் மரியாதையுடன் பேசாமலிருப்பதே நல்லது; ஏனெனில், மத்திய சர்க்கார் ஆதாரக்கல்வி முறைதான் இந்நாட்டிற்கு சிறந்த கல்வி முறை என்பதை ஒப்புக்கொண்டுள்ளது.

"மந்திரியின் பேச்சு எனக்கு ஆச்சரியத்தை விளைவிக்கிறது பழைய கல்வி முறையுடனேயே அவர் திருப்தியடைந்து விட்டதாகத் தெரிகிறது. எனினும் அவர் அம்மாதிரி கூறியிருக்க மாட்டார் என்று நான் திடமாக நம்புகிறேன். தவறு எங்கேயோ இருக்கிறது"

"கல்வித் திட்டம் சம்பந்தப்பட்டவரை கல்வித் துறையில் உள்ள நிபுணர்கள் மட்டும்தான் யோசனை கூறுவது பொருத்தமல்லவா?". என்று கேட்கப்பட்ட கேள்விக்கு அவர் கூறியதாவது:—

"அது முழுதும் சரியில்லை; நிபுணர்கள் அபிப்பிராயம் அவசியந்தான்; ஆனால், அதுவே எப்பொழுதும் முழுவதும் சரியாக இருக்க முடியாது; நிபுணர்களும் நிபுணர்கள் அல்லாதவரும் கூறுவதை கலந்து பரிசீலனை செய்ய வேண்டும். இதை நாட்டில் எல்லோரும் ஒப்புக் கொள்கின்றனர்," என்றார்.

புதிய ஆரம்ப கல்வித் திட்டத்தின் விளைவாக தற்சமயத்தில் ஆசிரியர்கள் பலர் வேலையிழப்பர் என்று நினைப்பதற்கு ஆதாரமில்லை என்று அவர் ஒரு கேள்விக்கு பதிலளித்தார்.

புதிய ஆரம்ப கல்வித் திட்டத்தை நகரங்களுக்கும் விஸ்தரிப்பது பற்றி அவர் கூறுகையில், நகரங்களிலுள்ள சூழ்நிலைக்குத் தக்கவாறு திட்டத்தில் ஏதாவது மாறுதல் செய்யவேண்டியது அவசியமா என்பது பற்றி கல்வி இலாகா தற்போது பரிசீலனை செய்து வருகிறது; இதற்கான விவரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன," என்றார்.

சர்க்கார் சிப்பந்திகளுக்கு கடன் வசதி

கராச்சி, மார்ச் 9—

பாகிஸ்தான் சர்க்கார் தன் சிப்பந்திகளுக்கு இரண்டு மாதச் சம்பளம் கடனாகக் கொடுத்து உதவ முன் வந்துள்ளது. சிப்பந்திகளில் பெரும்பாலோர் கடன் பட்டவர்களாக இருப்பதாலேயே இந்த வசதி செய்து தரப்படுகிறதாம். இந்த கடன் தொகை 24 தவணைகளில் கழித்துக்கொள்ளப்படும். கடன் தொகைக்கு 3½ சதவிகிதம் வட்டி விதிக்கப்படும்.

அன்பழகன் சொற்பொழிவுகள்

★

அண்ணாமலை நகர்—

6—3—54 சனி காலை 10½-மணிக்கு, பல்கலைக் கழகத் தமிழ் இலக்கியக் கழகத்தின் சார்பில் ஆண்டு விழாவும், மறைந்த பேராசிரியர் பூவராகம் பிள்ளை அவர்களின் படத் திறப்பு விழாவும் நடைபெற்றது. டாக்டர் அ. சிதம்பரநாதன் தலைமை வகித்து, பூவராகனார் ஆற்றிய தமிழ்த் தொண்டை விவரித்துப் பேசினார். திருமதி இரா. இராசாமணி அம்மையார் 'இலக்கிய இன்பம்' என்னும் தலைப்பில் வாழ்த்தியல் விரிவுரை நிகழ்த்தினார்.

பிறகு தோழர் க. அன்பழகன் பூவராகனார் படத்தைத் திறந்து வைத்து, அவரது பண்பு மேம்பாட்டையும், பொதுமை நெறியையும், சீலத்தையும் சிறப்பித்துக் கூறி, இலக்கிய இலக்கண நான் மாண் நுழை புலத் திறத்தினைப் பாராட்டி, சமயத் துறையிலும் வடமொழி ஆதிக்கத்தைத் துணிவொடு எதிர்த்து நின்ற அவரது உறுதியையும், தொண்டையும் எடுத்துக் காட்டி, தமிழ் மொழியின் மீதும், மக்களிடத்தும் வடமொழி ஆதிக்கம் செலுத்துவதை எதிர்த்து ஒழிப்பதே நாம் அவருக்குச் செய்யும் கடமையாகும் என்று விளக்கி சொற்பொழிவாற்றினார்.

* * *

திருவையாறு—

இந்நகர் வள்ளுவர் படிப்பகத்தை 7—3—54 ஞாயிறன்று மாலை 6½ மணிக்கு, தோழர் க. அன்பழகன் திறந்து வைத்தார் விழாவின் சார்பில், கீழ வீதியில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் டி. இரத்தினசாமி தலைமை ஏற்றார். தோழர் ஆர். என். மணி படிப்பகத்தின் அவசியத்தைக் குறித்துப் பேசினார். அடுத்து அன்பழகனார், வள்ளுவர் பெயரால் படிப்பகம் நிறுவியதின் பொருத்தத்தையும், வள்ளுவர் பெயரால் வழங்கும் கதைகளின் பொய்ம்மையையும், வள்ளுவர் கொள்கைகள், தமிழர், மொழி கலை நாகரிகப் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டவை என்பதையும், ஆரியத்தின் சாதி, சமய வெறியை வள்ளுவர் மறுத்துள்ளார் என்பதையும் விளக்கிப் பேசி, இன்றைய திராவிடத்தின் இருள் நீக்கும் திருவிளக்கு வள்ளுவரின் குறள் ஆதலின், அதனை இளைஞர் ஒவ்வொருவரும் கற்று, தெளிந்து அவ்வழி நடக்க முன்வர வேண்டுமென்று வலியுறுத்தி சொற்பொழிவாற்றினார்.

• • •

தியாகராயர் நகர்—

தியாகராயர் நகர் உயர்நிலைப் பள்ளியின் பாரதி மன்ற விழா 9—3—54 செவ்வாய் மாலை 6-மணிக்கு திரு. பழனியப்பப் பிள்ளை தலைமையில் நடைபெற்றது. தோழர் கணபதி அனைவரையும் வரவேற்றார். தோழர் அன்பழகனார் மாணவர் உரிமைகளையும், கடமைகளையும் விளக்கி தாய்மொழியைப் பாதுகாக்க வேண்டிய முறைகளை எடுத்துக் கூறி சொற்பொழிவாற்றினார்.

அமெரிக்க உதவி எதற்கு?

பாக் பிரதமர் விளக்கம்

லாகூர், மார்ச் 9—

"அமெரிக்காவிலிருந்து பாகிஸ்தான் எவ்வளவு இராணுவ உதவி பெறும் என்ற விஷயம், கூடிய சீக்கிரத்தில் அமெரிக்காவிலிருந்து வரும் இராணுவத் தூதுக்குழுவின் தீர்ப்பைப் பொறுத்திருக்கும். அத்தூதுக் குழு பாகிஸ்தானில் 10 நாள் தங்கும்,"

என்று பாக். பிரதமர் கூறியுள்ளார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"பாகிஸ்தானின் பொருளாதார நிலைமையும், தற்காப்புத் தேவைகளையும் தங்களுக்குள்ள வசதிகளைக் கொண்டு எங்களால் சரிக்கட்ட முடியவில்லை; அமெரிக்க இராணுவ உதவி, பாகிஸ்தானின் பொருளாதாரத்தையும், தற்காப்பையும் பலப்படுத்தும்; பாகிஸ்தான் பலம் வாய்ந்திருக்கிறது; ஆனால், இப்போது மேலும் பலம் பெறும்," என்றார்.

திருச்செந்தூர் தி. மு. க.

7—3—54 காலை 10 மணிக்கு கழக அலுவலகத்தில், கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் செல்லை என். சங்கரலிங்கம் தலைமையில் நடைபெற்றது:— செயலாளர்: எஸ். மெய்கண்டான்; துணைச்செயலாளர்: எஸ். முத்து; பொருளாளர்: கே. கணபதி; மாவட்டப் பிரதிநிதி: கே. எஸ். கேசவன்; விளம்பர உறுப்பினர்: இரா. மயிலைநாதன்; செயற்குழு உறுப்பினர்கள்: ஜே. பாலசிங் மோசஸ், ஏ. நல்லக்கண்ணு, கே. சுப்பையா, எஸ். பி. மணியம், என். இராஜன், எம். நல்லான் பின்னர் தோழர்கள் வி.வி. தனுஷ்கோடி, எம். என். ராய் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டதுடன், திருச்செந்தூர் தாலுகா (வட்டம்) கமிட்டி, திருச்செந்தூரிலேயே இயங்க வேண்டுமென வட்டக் கமிட்டியினரைக் கேட்டுக் கொண்டும், கழகக் கட்டிடத்தில் பன்னீர்செல்வம் பெயரால் ஒரு படிப்பகம் ஆரம்பிப்பதென்றும், பஞ்சாயத்து போர்டு வாசகசாலையில் கழகத் தலைவர்கள் எழுதிய புத்தகங்களை வழங்க வேண்டுமென பஞ்சாயத்து போர்டைக் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஆமதாபாத் தி. மு. கழகம்

6—3—54 மாலை 3-30 மணியளவுக்கு சமால்பூர் தி. மு. கழகச் செயற் குழு தோழர் ப. ஆதிமூலம் தலைமையில் கூடியது. அதுபோது, எம். என். ராய், நெடும்பலம் சாமியப்பா, அத்தாக்குடி வி. வி. தனுஷ்கோடி ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது. பின்னர், தோழர் இரா. வைத்திலிங்கம், நா. தேவராச ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மார்ச் இறுதியில் நடைபெறும் 3-வது ஆண்டு விழாவுக்கு தோழர்கள் அண்ணாதுரை, இரா. நெடுஞ்செழியன், ஈ. வே. கி. சம்பத், காஞ்சி மணிமொழியன், நாகூர் அனிபா ஆகியோரை வரவழைப்பதென்று முடிவு செய்யப்பட்டது.

கெய்ரோ, மார்ச் 10—

எகிப்து புரட்சிகர கவுன்சிலின் தலைவராக முன்பு இருந்தது போல மீண்டும் நகிபே வரவேண்டும் என்று எகிப்திய பிரதம மந்திரி கர்னல் நசீர் தன் சகாக்களிடம் தெரிவித்திருப்பதாக 'அலி அக்பர்' என்ற தினசரி கூறுகிறது.

அமெரிக்க இராணுவ உதவி

—(:)—

அதன் விவரங்கள் என்ன?

வாஷிங்டன், மார்ச். 10—

அமெரிக்க இராணுவ உதவித் திட்டத்தில் பாகிஸ்தானும் சேர்ந்த பிறகு இத்தகைய அமெரிக்க இராணுவ உதவி பெறும் நாடுகளின் எண்ணிக்கை 28-ஆகும்.

தற்காப்பு உதவித் திட்டம் எனப்படும் இந்த இராணுவ உதவித் திட்டம் 1949 அக்டோபரில் அமெரிக்க காங்கிரசில் தற்காப்பு உதவிச் சட்டம் நிறைவேற்றப் பட்டவுடன் ஆரம்பித்தது.

அமெரிக்க இராணுவ உதவி பெறும் நாடுகளுக்கு அனுப்பப்படும் பொருட்கள், அவைகளைப் பெறும் நாடுகளின் தேவைகளுக்குத் தக்கவையாக இருக்கும். அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டு அனுப்பப்படும் கருவிகளை இயக்கி நடத்தவும், அந்தந்த நாடுகளில் நடத்தப்படும் பயிற்சித் திட்டங்களுக்கு உதவி செய்ய சில தொழில் நுணுக்க நிபுணர்களையும் சில வேளைகளில் அனுப்புவதுண்டு.

இருக்கும் கருவிகள், தேவைப்படும் கருவிகள் இவைகளின் அடிப்படையில் குறிப்பிட்ட உதவிகளைப் பற்றிக் கிடைக்கும் உத்தியோக பூர்வமான வேண்டுகோளின்படியே எல்லா சந்தர்ப்பங்களிலும் அமெரிக்கா உதவி அளிக்கப்படுகிறது.

காங்கிரஸ் இயற்றிய சட்டப்படி, அமெரிக்கா அளிக்கும் இராணுவ உதவி கண்டிப்பாக தற்காப்புக்கும், ஆக்கிரமிப்புக்கு எதிராக பொது உலகப் பாதுகாப்பை அதிகரிக்கவும்தான் பயன்படுத்தப்பட வேண்டுமென ஒவ்வொரு தனிப்பட்ட உதவி உடன்படிக்கையிலும் எழுதப்படுகிறது.

இராணுவ உதவித் திட்டப்படியே அமெரிக்காவிடமிருந்து பெறும் உதவி பயன்படுத்தப்படுமென்று பாகிஸ்தான் உறுதியளித்துள்ளது.

அமெரிக்காவிடமிருந்து இராணுவ உதவி பெறும் நாடுகள் பின்வருமாறு:—

ஐரோப்பா:—பெல்ஜியம், லக்ஸம்பர்க், டென்மார்க், பிரான்சு, கிரீஸ், நெதர்லாந்து, நார்வே, போர்ச்சுகல், ஸ்பெயின், பிரிட்டன், யுகோஸ்லேவியா.

சமீபக் கிழக்கு:—இரான், துருக்கி எதியோப்பியா.

தூரக்கிழக்கு:—கொரியக் குடியரசு; சீனு (பார்மோசா), பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, இந்தோ-சீனு.

தென் அமெரிக்கா:— பிரேஜில், சிலி, கொலம்பியா, கியூபா, டொமினிகன் குடியரசு, ஈக்வடார், பெரு, உருக்வே,

திருவள்ளுவர் பொதுநல கழகம்

திருக்கழுக்குன்றத்தைச் சார்ந்த பத்துக் கிராமங்களில் ஒன்றுகிய விளாகம் கிராமத்தில், 7—3—54ல் கழகம் துவக்கப்பட்டது. தோழர் தி. த. தட்சிணாமூர்த்தி கழகத்தைத் துவக்கி வைத்தார்.

கழகத்திற்கு பாதுகாவலர், செயற்குழு, தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கொலாபா தி. மு. கழக நடிகர் குழு கூட்டம்

பம்பாய், மார்ச். 10—

4—3—54ல், இரவு 10 மணியளவில் சித்தர் நகரில் நடைபெற்றது அதுபோது கழக அலுவலக அமைப்பு நிதிக்காக 'புரட்சிப் பெண்' என்ற நாடகத்தை நடத்தவும், தோழர் ஆர். என். சுப்பையா அவர்கள் துணைவியார் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பள்ளி ஆண்டு விழா

சென்னை, புதுவண்ணை, திருவொற்றியூர் பெரியசாலை நகராண்மைக் கழக உயர்தர ஆரம்பப் பள்ளி மாணவர் சங்கத்தின் 12-ம் ஆண்டு விழா சென்னை நகரசபை துணைமேயர் எஸ். வேணுகோபால் தலைமையில் நடைபெற்றது. தலைமை ஆசிரியர் திரு. க. சுப்பராயன் அனைவரையும் வரவேற்றார்; தோழர் வ. பலராமன் ஆண்டறிக்கை வாசித்தார். 'என்ன உலகமடா?' என்ற ஓரங்க நாடகமும் நடன நிகழ்ச்சிகளும் முடிந்தபின்னர் திரு. சி. என். அருணாசலம் கட்டுரை, பேச்சு, பாடல், நடனம், நாடகம் போட்டிகளில் கலந்துகொண்டு தேர்ச்சிபெற்ற மாணவ — மாணவியர்களுக்குப் பரிசுகள் வழங்கிப் பாராட்டினார். திரு. சி. சுந்தரம் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

தென்காசி இளைஞர் தி. மு. கழகம்

நிர்வாகக் குழுவின் கூட்டம் எம். எஸ். ராமசந்திரன் தலைமையில் 7—3—54 ஞாயிறு காலை 10 மணிக்கு நடைபெற்றது. அதுபோது; 21—3—54 ஞாயிறன்று கழகத் துவக்க விழாவை நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

தென் பகுதி இரயில்வேமேன் கிளை—பெரம்பூர்

25—2—54 மாலை 5-30 மணியளவில் தோழர் டி. ஜே. ராசரத்தினம் தலைமையில் உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எஸ். இராகவானந்தம், அன்புதாசு ஆகியோர் சங்க ஆக்கவேலைகள் குறித்துப் பேசினர்.

2—3—54ல், தோழர் எ. சம்பந்தம் தலைமையில் நிர்வாகக் கூட்டம் நடைபெற்றபோது, பல முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

6—3—54 சனி மாலை தோழர் வி. சம்பந்தம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தோழர் எஸ். இராகவானந்தம் டில்லியில் ரயில்வே மந்திரியைப் பேட்டி கண்ட விவரங்களை விளக்கினார்.

அனுதாபக் கூட்டம்

அருப்புக்கோட்டை தாலுகா, இராமநாயக்கன்பட்டி உறவின்முறை நாடார்கள் சார்பில், அத்தாக்குடி நகராண்மைக் கழகத் தலைவர் தோழர் வி. வி. தனுஷ்கோடி அவர்கள் மறைவுக்காக சத்திரிய உயர்தர ஆரம்பப் பாடசாலையில் தோழர் பெ. ராமநாத வெயிலுமுத்து அவர்கள் தலைமையில், 4—3—54 மாலை 4-மணிக்கு ஓர் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது.

மறுநாள் காலை 8 மணிக்கு, அருப்புக்கோட்டைத் தோழர் கு. ஆ. முத்து அவர்கள் மறைவுக்காகவும் பள்ளி மானேஜர் தலைமையில் ஓர் அனுதாபக் கூட்டமும் நடைபெற்றது. மறைந்தவர்களின் குடும்பத்தினருக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

"படுகொலை"—நாடகம்

—:0:—

சங்கரலிங்கபுரம் கோவில் நகர தி. மு. கழக ஆதரவில் 28-2-54 இரவு 9 மணிக்கு சுவாமி சன்னதியில், தோழர் ப. புஷ்பமூர்த்தி தலைமையில், தோழர்கள் டி. ஆர். என்., ஆ. கந்தசாமி குழுவினர் நடத்த "படுகொலை" என்னும் சீர்திருத்த நாடகம் நடைபெற்றது. அத்தாக்குடி வழக்கு நிதிக்கு ரூ. 4—15—0 வசூலாகியது.

(உ. [illegible])

பொதுச்செயலாளர் பேச்சு...

—:o:—

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கென, கனவானைப் பணம் கேட்டால், முதல் மகன் திருமணத்திற்கு 200 ரூபாயும் தந்து, தானும் திருமணத்திற்குச் சென்று டிரைவரை கவுரவப்படுத்தவார்; இரண்டாம் மகனின் திருமணத்திற்கு, 200 ரூபாய் 20 ரூபாயாகக் குறையும்; மூன்றாவது மகன் மணத்திற்கு ஊரிலேயே இல்லாமற் போய் விடுவார்—கனவானின் கார் டிரைவர், கனவானையே எத்தனை நாட்களுக்கு நம்பியிருக்க முடியும்? அல்லது, அப்படி அவரையே நம்பியிருப்பது தமிழனின் பண்பிற்குத்தான் ஏற்றதாகுமா?"

"நான் பயப்படக்கூடிய வகையில், ஆளும் கட்சியைச் சேர்ந்த நண்பர் செங்கல்வராயன், 'கைத்தறியாளர்கள் வேறு தொழிலும் கற்றுக்கொள்ள வேண்டும்,' என்றார். அது மிகவும் ஆபத்தானது; பிச்சை கேட்டு வருபவனுக்கு ஏதும் தராமலிருப்பதால் 'அங்கே சாவடி இருக்கிறது, போய்ச் சாப்பிடு' என்று நம் கையாலாகாத்தனத்தைக் காட்டுவது போன்றதுதான்—கைத்தறியாளரை வேறு தொழில் கற்றுக்கொள்ளச் சொல்வது; அல்லது நான் நெசவாளர் சார்பில் கேட்கிறேன்—'அப்படியே நெசவாளர் வேறு தொழில் கற்றுக்கொண்டாலும், தொழில் கிடைக்கும் என்ற உத்தரவாதம் எங்கே இருக்கிறது?'"

"நெசவாளர் உழவு வேலை செய்ய முடியுமா என்றால், முடியாது; அவர்கள் அம்மாதிரி உழவுத் தொழில் கற்றுக்கொள்வதானாலும் நல்ல நெசவாளருமாகார்—நல்ல உழவருமாகார். டிராம்வே தொழிலாளர்கள் வேலையிழந்தபோது கூடிக் கூடிப் பேசினோம்—அவர்களுக்கு வேலை தர முடிந்ததா? அவர்களுக்கு வேறு என்ன வேலை செய்ய முடியும்—டிராம் ஓட்டுவதைத் தவிர? எனவே, மானுக்கு ஆபத்து வேங்கையால் என்றால், மானுக்குப் பாதுகாப்புத் தரத்தான் வேண்டும். ஆறு, கரை புரண்டோடாமலிருக்க அணை தேவைதானே?"

"நெசவாளர் பிரச்னையில் ஆச்சாரியாருக்கு, அக்கறை இருக்கிறது—ஆற்றலும், அறிவும் இருக்கின்றன; என்றாலும், அதிகாரம் இல்லை. அந்த அதிகாரத்தைப் பெறத்தான் நாங்கள் முயற்சிக்கிறோம். அந்த அதிகாரத்தைப் பெற்று கைத்தறியாளரைக் காப்பாற்றும் நாள் வரத்தான் போகிறது! தறிக் குழியில் நல்ல தமிழ் இலக்கியம் வளரும் அந்த நாள் வரத்தான் போகிறது! யவனத்திற்கும், சீனத்திற்கும் நமது ஆடைகள் சென்று, நம் தொழில் மேன்மையைக் காட்டும் நாள் மீண்டும் வரத்தான் போகிறது!"

தொடர்ந்து தோழர் அண்ணாதுரை அவர்கள் பேசியதாவது:—

"கைத்தறி நெசவாளர் பிரச்னைக்கு ஒரு நல்ல முடிவு காணும் வகையில் கொண்டாடப்பெறும் இந்த 'கைத்தறி வார' விழாவில் என்னையும் கலந்து கொள்ளச் செய்த இந்த விழாக் குழுவினருக்கு என் நன்றி.

தலைமை தாங்கும் நண்பர் செங்கல்வராயன் அவர்கள் எனக்கும் அவருக்கும் உள்ள தொடர்பு பற்றியும், பொதுப் பிரச்னைகளில், எல்லாக் கட்சியினரும் சேர்ந்து பணிபுரிய வேண்டியதின் அவசியம் குறித்தும் விளக்கினார்கள்.

"எந்த நேரத்தில் எல்லாக் கட்சியினரும் ஒன்றாகச் சேர்கின்றனர்? எந்த ஒரு பிரச்னைக்கு தனியாக யாரும் முடிவு காண முடியவில்லையோ, எந்தப் பிரச்னை பலருக்கு புரியாத புதிராக இருக்கிறதோ, எந்தப் பிரச்னை பலரின் கூட்டுச் சேர்க்கையால் தான் தீர்க்கப்பட முடியுமென்ற நிலை இருக்கிறதோ. அந்தப் பிரச்னையில்தான் எல்லாக் கட்சியினரும் ஒன்றுபடுகின்றனர்.

"நெசவாளர் பிரச்னை தனிப்பட்ட எந்த ஒரு கட்சியினருடையதும் அல்ல. சமுதாய அரசியல் கொள்கைகள் வேறுபட்டிருந்தாலும், லட்சக்கணக்கான மக்களின் எதிர்கால வாழ்வு பற்றிய ஒரு பிரச்னையில் எல்லோரும் ஒன்று சேர்ந்துதான் ஆகவேண்டும்.

"கைத்தறி நெசவாளர் நிலை, சென்ற சில ஆண்டுகளாய் நாம் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு அவமாயிருக்கிறது. தான் செய்திருந்த நல்ல தொழில் நசித்துப் போய் சேலத்திலிருந்தவன் தென்னாற்காட்டிலும், காஞ்சியிலிருந்தவன் மதுரையிலும், இப்படி அவரவர் ஊரையும், வீடு வாசலையும் விட்டு பிச்சைக்காரர்களாய் சுற்றி அலைவதைக் கண்டோம்; இந்தப் பிரச்னையை நாம் தீர்க்கவில்லை, இன்னும்!

"நண்பர் செங்கல்வராயன் அவர்கள் இரண்டு உலக யுத்தங்களைக் கணக்கு அழைத்து, 'இது ஒரு நீண்ட காலப் பிரச்னை' என்று சொன்னார்; உண்மைதான்—கைத்தறி நெசவாளர் பிரச்னை ஒரு நீண்ட காலப் பிரச்னைதான். சிறிது காலைக்கு நெசவாளர்க்கு நூல் இல்லை என்ற குறை இருக்கும்; பின், கிடைக்கும் கூலி போதுமானதாயில்லை என்ற கிளர்ச்சி இருக்கும்; இன்னும் சில நாளில் செய்த துணிகள் விற்பனையாகவில்லை, அதனால் நெசவாளர்க்கு வேலை இல்லை—என்று, இப்படியாக நீண்டு, தொடர்ந்து வளர்ந்து வரும் பிரச்னையாகும், இந்தக் கைத்தறியாளர் பிரச்னை!

"இப்படிப்பட்ட ஒரு பிரச்னையைத் தீர்க்க ஆட்சி பீடத்திலிருப்பவர்கள், எல்லாக் கட்சியினர் ஆகிய எல்லோராலும் முடியவில்லை என்றால், அந்தப் பிரச்னையின் அடிப்படையை அலசிப் பார்க்கத் துணிவு வேண்டும்.

"எல்லாக் கட்சியினரும் ஒளிவு மறைவின்றி முதலில், இந்த நெசவுத் தொழில் வாழ வேண்டுமா, கூடாதா என்பதைத் தெளிவாக, திட்டவட்டமாகச் சொல்லிவிட வேண்டும்.

"என்னைப் பொறுத்த வரையில், கைத்தறித் தொழில், எவ்வளவு தான் ஆலையின் போட்டியிருந்தாலும், அதை சமாளித்து நிலைத்து நிற்கும் ஆற்றல் உடையது, என்ற கருத்துடையவன் நான். கைத்தறித் துணிகள், எந்த வகையிலும் ஆலைத் துணிகட்குக் குறைந்தவை இல்லை. இங்குள்ள கைத்தறித் துணிக் கண்காட்சியை நானும் நண்பர் செங்கல்வராயனும் சுற்றிப் பார்த்தோம்; அங்குள்ளவையெல்லாம் நமது நெசவாளரின் திறமையினால், தொழில் நுணுக்கத்தினால் ஆனவை என்றறியும்போது எவ்வளவு ஆச்சரியப் பட்டேன் தெரியுமா?

"ஆலைத் துணிகளின் அழகு, உழைக்கும் திறம் இவைகளைக் காட்டிலும் பன்மடங்கு கைத்தறித் துணிகள் சிறந்தவை.

"தாய் வாங்கினால், மகளும் வைத்திருந்து உடுத்திக்கொள்ளும் உரம்பெற்ற சேலைகள் வேண்டுமா—வாருங்கள் காஞ்சிபுரத்திற்கு! அழகிய கரை போட்ட வேட்டிகள் வேண்டுமா—வாருங்கள் சேலத்திற்கு!—பலபல வண்ணங்களிலே, கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில், கைத்தறித் துணிகள் செய்யப்பட்டிருப்பதைக் காணலாம்.

"விஞ்ஞானம் எவ்வளவுதான் வீறிட்டுப் பாய்ந்தாலும், கைத்தறித் தொழில் காப்பாற்றப் பட முடிந்த ஒன்றே என்பது என் நம்பிக்கை.

"சுவிட்சர்லாந்திலே கைக் கெடியாரங்கள் குடிசைகளிலே தான் தயாரிக்கப்படுகின்றன. கைக்கடிகாரத்திற்குத் தேவையான, சிறிய சிறிய பாகங்களெல்லாம், குடிசைகளிலேயே தயாரிக்கப்பட்டு, பிறகு, அம்மாதிரி தயாரிக்கப்பட்ட சாமான்களை ஒன்று சேர்த்து, கடிகாரமாக உருவாக்கும் வேலை மட்டும் தான் பெரிய தொழிற்சாலைகளுக்குத் தரப்படுகின்றன.

"அதைப் போலத்தான், 'ஆலைகள், பருத்தியை நூலாக மட்டும் ஆக்கும்; நூலை, நெசவாளிதான் ஆடையாக நெய்வான்,' என்றிருக்க வேண்டும்.

"நான் சற்று வலியுறுத்திச் சொல்வதையெல்லாம் நீங்கள் எண்ணிப் பாருங்கள்.—

"இந்தியாவின் எந்தப் பகுதியிலே ஆலைகள் அதிகம்? எங்கே குறைவு? ஆலை அதிகமாக உள்ள பகுதியில்தானே கைத்தறித் தொழிலுக்குப் போட்டி இருக்க வேண்டும்? கோவையிலே, மேட்டூரிலே நெய்யப்படும் ஆலை வேட்டி, புடவைகளால், சென்னை மாநிலக் கைத்தறி வேட்டி, புடவைகளுடன் போட்டி ஏற்படாதே? எங்கிருந்து இந்தப் போட்டி ஏற்படுகிறதோ அதற்கு வேலி போட்டால்லவா கை நெசவுத் தொழில் காப்பாற்றப்பட முடியும்?"

கழகக் கூட்டங்கள்

அணியூர்

13—3—54 மாலை 7 மணிக்கு

இடம்: புதூர் மடத் திடல்

தலைவர்: மே. சி. சிதம்பரனார்

பேசுபவர்:

சி. பி. சிற்றரசு

★

நெகமம்

13—3—54 மாலை 7 மணிக்கு

இடம்: நாகர் மைதானம்

தலைவர்: பி. என். ராமானுசம்

பேசுவோர்:

ஈ. வெ. கி. சம்பத்

என். அப்பாவு

★

கோவை

13—3—54 மாலை 6 மணிக்கு

இடம்: சிதம்பரம் பூங்கா

பேசுபவர்:

மு. கருணாநிதி

அகில இந்திய கைத்தறி வார விழா

13—3—54 மாலை 5 மணிக்கு குடியாத்தம், ஆற்றில், தோழர் எம். கே. திருவேங்கிடம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் அண்ணாதுரை, ஏ. கோவிந்தசாமி, எம் எல். ஏ. ஆகியோர் பேசுவர்.

நெசவாளருக்கு....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கூட்ட முடிவில் தோழர் லெட்சுமணன் கலம் நப்புவின் கலா நிகழ்ச்சி நடைபெற்றது.

தோழர் டி. செங்கல்வராயன் மேலும் குறிப்பிட்டதாவது:—

"நெசவாளர் பிரச்னை இன்று ஒரு பொதுப் பிரச்னை. எந்த ஒரு குறிப்பிட்ட ஜாதி, மதப் பாகுபாடுகளுக்கோ, கட்சி வேறுபாடுகளுக்கோ இந்தப் பிரச்னையில் இடமில்லை. இதை முதலில் நீங்கள் எல்லாம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். பல்வேறு அரசியல் கருத்து வேறுபாடு இருப்பினும் இந்த நெசவாளர் பிரச்னையில் ஒன்று சேர்ந்து பிரச்னைக்கு பரிகாரம் தேட வேண்டியது மிக அவசியம்.

"இந்தப் பிரச்னையைத் தீர்க்க பலர், பல்வேறு வழிகளைச் சொல்லியுள்ளார்கள்; ஆனால், இந்தப் பிரச்னை சரித்திர பூர்வமாக எப்படி வளர்ந்து வந்திருக்கிறதென தெரிய வேண்டுவது அவசியம்.

"18-ம் நூற்றாண்டுக்கு முன், கைத்தறித் தொழில், தீர்க்கப் பட வேண்டிய ஒரு பிரச்னையாயிருக்கவில்லை; ஓங்கி வளர்ந்திருந்த ஒரு பெரும் குடிசைத் தொழிலாயிருந்தது.

"பதினெட்டாம் நூற்றாண்டுக்குப் பின் விஞ்ஞான விஸ்தரிப்பும், இயந்திர வளர்ச்சியும் அதிகரிக்கலாயின; நெசவாளர் கஷ்டம் அனுபவிக்க ஆரம்பித்தனர்.

"முதலாம் உலக மகா யுத்தம் தோன்றியது; இயந்திர சாலைகளும், இன்ன பிற விஞ்ஞான சாதனங்களும் யுத்த தளவாடங்கள் தயாரிப்பதில் ஈடுபட்டமையால் கைத்தறித் தொழில், போட்டியினின்றும் தவிர்க்கப் பட்டு, பிரச்னை ஓரளவு தீர்க்கப் பட்டது; ஆனால், யுத்த முடிவில் மீண்டும் பெரியதொரு பிரச்னையாக வளர ஆரம்பித்தது. பின் நல்லதற்கோ அல்லது தீமைக்கோ, இரண்டாம் உலக யுத்தம் தொடங்கியது. பிரச்னை தீர்ந்து விட்டது என்றெண்ணும் அளவு, கைத்தறியாளர் கஷ்டங்கள் குறைந்தன; ஆனால் யுத்த முடிவில் மீண்டும் இந்தப் பிரச்னை முன்போலவே உருக்கொண்டது.

"1933ல் சர்க்கார் இந்தப் பிரச்னை குறித்து விசாரணை செய்ய ஒரு கமிட்டியை ஏற்படுத்தினார். அந்தக் கமிட்டியும் கைத்தறித் தொழில் வாழத்தான் வேண்டுமென தீர்ப்பளித்தது. அரசாங்கமும் கைத்தறித் தொழில் வளர்ச்சிக்கென 5 லட்சம் ரூபாயை ஒதுக்கினர். பின்னர், தேவையான புள்ளி விவரங்கள் சேகரிப்பதற்காக மீண்டும் ஒரு கமிட்டி நிறுவப்பட்டது. அந்தக் கமிட்டியினர் கைத்தறித் தொழில் வளர்ச்சிக்கு மூன்று யோசனைகள் தந்தனர்.

(1) கைத்தறித் தொழிலாளருக்கு போதுமான கூலியைத் தர வேண்டும்;

(2) அவர்கள் வேலை செய்வதற்கு தடங்கலின்றி எப்போதும் கட்டுப்பாடான நூல் விநியோகம் வேண்டும்;

(3) அவர்கள் செய்த துணிகளுக்கு 'மார்க்கெட்' தேடியாக வேண்டும்—இந்த மூன்று யோசனைகளையும் அரசாங்கம் ஏற்றுக் கொண்டதுடன் அதற்கான காரியங்களையும் அவ்வப்போது செய்து வந்திருக்கின்றனர்.

"இப்போதுகூட, கைத்தறி நெசவாளருக்குத் தேவையான நூல் முழுவதும் நூற்பதற்கு, திருநெல்வேலியிலும், குடியேற்றத்திலும் தனி ஆலைகள் நிறுவுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன சட்டசபையிலும், கரை போட்ட வேஷ்டி, சேலை ஆகியவற்றின் உற்பத்தியை கைத்தறிக்கே ஒதுக்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேறியுள்ளது. இந்த ஆண்டில் துணிகளின்மீது உபரி வரி போட்டு—அதில் கிடைக்கும்

போதுச் செயலாளர்

அண்ணாதுரை

சுற்றுப் பிரயாண நிகழ்ச்சி

பொதுச் செயலாளர் தோழர் அண்ணாதுரை அவர்கள், தோழர்கள்: அ. பொன்னம்பலனார், ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., எஸ். என். பி. லிங்கம் ஆகியவர்களுடன் கீழ்க்கண்ட இடங்களில் சுற்றுப் பயணம் செய்து, பொதுக்கூட்ட நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுவார்கள்;

13-3-54: குடியாத்தம் — அகில இந்திய கைத்தறி வார பொதுக்கூட்டம்.

14-3-54: பெங்களூர்—திராவிட முன்னேற்றக் கழக தூத்துக்குடி நிதி அளிப்புப் பொதுக் கூட்டம்.

15-3-54: திருவண்ணாமலை — திராவிட முன்னேற்றக் கழக தூத்துக்குடி நிதி அளிப்புப் பொதுக் கூட்டம்.

20—3—54க்கு மேல் நாகப்பட்டணம், கோடாச்சேரி திராவிட முன்னேற்றக் சழகங்கள் சார்பில் தூத்துக்குடி நிதி அளிப்புப் பொதுக்கூட்டங்கட்குச் செல்லக்கூடும்.

குறிப்பு:—சென்னை உயர்நீதி மன்றத்திலுள்ள ஐவர் அப்பீல் வழக்கு விசாரணை 8—3—54: 10—3—54: 11—3—54: தேதிகளில் குறிப்பிட்டபடி நடைபெறவில்லை. இவ்வழக்கு விசாரணை காரணமாக, அவசியம் ஏற்பட்டால் மேற்கண்ட நிகழ்ச்சிகளில் மாற்றங்களும் ஏற்படக்கூடும்.

திருமணம்

7—3—54 அன்று தோழர் எம். கிருட்டிணன் அவர்களுக்கும்—தோழியர் கே. புஷ்பவேணி அவர்களுக்கும் சென்னை ஏழுகிணறு மலையப்பன் தெருவிலுள்ள நாகம்மாள் பள்ளியில் தோழர் கா. அப்பாதுரையார் தலைமையில் திருத்திய திருமணம் நடந்தேறியது. அச்சமயம் தோழர்கள் வி. முனுசாமி, இன்மொழி, மா. இளஞ்செழியன் ஆகியோர் மணமக்களை வாழ்த்திப் பேசினர். திருமணத்தின் நினைவாக "நம் நாடு" தின இதழ் வளர்ச்சிக்காக ரூ 1 நன்கொடை அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்-மணமக்களுக்கு நமது வாழ்த்து உரித்தாகுக.

—(ஆ-ர்.)

பெயர் மாற்றம்

பம்பாய், மார்ச். 10—

தோழர் அ. சே. நபினூர் (நிர்வாகக் குழு உறுப்பினர்) நாடக நடிகருமாகிய அவர்கள் தன் பெயரை "தம்பித்துரை" என மாற்றிக் கொண்டார். அதன் நினைவாக "நம் நாடு" வளர்ச்சிக்கு 2 ரூ நன்கொடையளிக்கப்பட்டது — வரப்பெற்றோம்—நன்றியுடைய கூ-பொறுப்பாளர்.

சுமார் 2½ கோடி ரூபாய்களைக் கொண்டு கைத்தறி நெசவாளர் நிலை உயர ஆவன செய்து வருகிறார்கள். துணி விற்பனைக்காக, சிங்கப்பூர், ஏடன், இலங்கை, கராச்சி, பாக்டாட், மற்றும் கிழக்காசிய நாடுகளில், விற்பனை நிலையங்கள் தோற்றுவித்து, துணிகளுக்கான மார்க்கெட் தேடித் தந்து கொண்டிருக்கின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அறிஞர் அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, குரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.